STC 452/2025 20.11.2025

PW1 பொன்னையா த/பெ. சேது

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

நான் எந்த ஊரில் குடியிருந்து வருகிறேன் என்றால திருச்சுனை. நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் மற்றும் கல்லுக்கால் உடைக்கும் ஆள் வைத்து வேலை செய்து வருகிறேன். கல்லுக்கால் உடைப்பதற்கு உரிமம் வைத்துள்ளேனா என்றால் ஏலம் எடுத்து வாய்மொழி ஒப்பந்தம் மூலம் வேலை செய்து வருகிறேன். மேற்கூறியவாறு எந்த தொழிலும் நான் செய்யவில்லை, வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எத்தனை ஏக்கர் விவசாயம் செய்து வருகிறேன் என்றால் 8 ஏக்கர் விவசாயம் செய்து வருகிறேன். 8 ஏக்கர் விவசாய நிலத்திற்கான ஆன ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. ஒரு ஆண்டுக்கு விவசாயம் முலமாகவும், பாறை தொழில் மூலமாகவும் எவ்வளவு வருமானம் வரும் என்றால் சுமார் 10 லட்சம். நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை.

**(எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது )**